சொல்லியிருக்கிறேன். புவனேஸ்வரி என்பவரின் குடும்பம் தாக்கப்பட்டதாக (குறுக்கீடு) அதுதான் 9.40 மணிக்குக் கொடுத்தீர்கள். 9½ மணிக்குள் கொடுத்திருக்க வேண்டும். அதனால் நாளை அது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்ததைத்தான் நான் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் நான் பதில் சொல்கிறேன். நாளை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டீர்கள். பிறகு அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு)

திரு இளம்வழுதி: தலைவர் அவர்களே, 1 மணிக்கு முன்னால் கொடுத்தாலும் அரை மணிக்கு முன்னால் கொடுத்தாலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இதுபோல் எடுத்துக்கொள்கிற அளவுக்கு நிலையில் இருந்தால் எடுத்துக் கொள்வேன். நிராகரிக்க வேண்டியதாக இருந்தால் நிராகரித்து விடுவேன். (குறுக்கீடு) அதற்குத்தான் அரை மணி நேரம் முன்னதாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) விதி 55-ல் கொடுத்தால் 7 நாள் கழித்துத்தான் எடுத்துக்கொள்ள முடியும். இதை நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அதற்காக 9.40 க்குக் கொடுத்தால் எடுத்துக் கொள்ள முடியாது. விதி அப்படி இருக்கிறது. அரை மணிக்கு முன்னர் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) அனுமதி மறுத்தால் என்ன செய்யமுடியும்? நான் இதற்கு அனுமதி மறுக்கவில்லை. அனுமதித்து இருக்கிறேன். (குறுக்கீடு) 9.40க்குக் கொடுத்ததால்தான் இன்றைக்கு எடுக்கவில்லை, நாளைக்கு எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) திரு. எஸ். ஆண்டித்தேவர்.

முற்பகல் 11-25

5. அறிவிப்புகள்

(அ) திரு. சி. ஞானசேகரன் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டது குறித்து

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இதற்கு முன்னால் இரண்டு முறை வெளியேற்றப் பட்டிருக்கிறார். இன்றும் நீங்கள் வெளியேற்றி இருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதியின்படி அவர்மீது நடவடிக்கையெடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஞானசேகரன் மட்டுமல்ல, இன்னும் சில 2, 3 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் என்னுடைய பழைய ஆணையைப் பார்க்கச் சொல்லி இருக்கிறேன். திரு. ஞானசேகரன், பேரவை விதி 120-ன்படி இந்தப் பேரவைக் கூட்டத்தின் எஞ்சிய நாட்களுக்கு அவையை விட்டு விலக்கி வைக்கப்படுகிறார். அதைப்போல இன்னும் 2, 3. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்து பின்னர் அறிவிப்பு வெளியிடுவேன்.

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொருவராக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் இவ்வளவு முறைகேடாக நடந்தால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) நான் பேரவையை நடத்த வேண்டும். (குறுக்கீடு) நான் பேரவையை நடத்த வேண்டும், (குறுக்கீடு) வேறு வழியில்லை. பிறகு என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் உங்களுடைய நடவடிக்கையில் குற்றம் கண்டுபிடிக்கிற வகையில், அரை மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்ததற்கு அனுமதித்தீர்களா? இதை அனுமதிக்கமாட்டீர்களா என்று கேட்பது முறையற்ற செயல். மாண்புமிகு பேரவைத் தலைவரை முதலில் மதித்து மாண்புமிகு உறுப்பினர் நடந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், இதுபற்றி நான் சொல்லி இருக்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) வருவாய்த் துறை ஊழியர்கள் வேலைநிறுத்தப் பிரச்சினை குறித்து-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வருவாய்த் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் பற்றிய பிரச்சினை குறித்து திரு. ஜி. பழனிசாமி, திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு இரா. தாமரைக்கனி ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அவையிலே எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 32,000-க்கும் மேற்பட்ட வருவாய்த் துறை ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் சுமார் இரண்டு மாதகாலமாக

1995 ஏப்ரல் 28] [திரு. எஸ்.டி.. சோமசுந்தரம்]

நிலைமைக்கேற்றவாறு, அவர்களுடைய கோரிக்கையையும் இந்த அரசு கவனிக்கும். எல்லோரும் வேலைநிறுத்தம் செய்யவில்லை. அந்த வேலைகள் நடந்து கொண்டு இருக்கிறது என்பதையும் இந்த அவைக்குச் சொல்லி, வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கும், திரும்ப வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதையும், அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு கவனிக்கும் என்பதையும், அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டுதான் இருக்கிறேன் என்பதையும் இந்த சமயத்திலே சொல்லிக் கொள்கிறேன். ஆனால் நான் அவர்களை அழைத்துப் பேசவில்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். அவர் அப்படி சொல்லலாம். சொல்லாமல் இருக்கக் கூடாது. சொல்ல வேண்டியது அவர் கடமை, எதிர்க்கட்சி என்றால் அதைப்பற்றி பேசியிருந்தாலும், அதைப்பற்றி பேசினேன் என்று சொல்லக் கூடாது. அது எதிர்கட்சியினுடைய அந்தஸ்தைக் குறைத்துவிடும். ஆகையால் பேசியதைப் பற்றி பாதகம் இல்லை. நான் அவர்களை அழைத்து பேசிக் கொண்டு தான் இருக்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை அரசு அனுதாபத்தோடு கவனிக்கும் என்பதையும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்களும், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் அவற்றையெல்லாம் முடித்துக் கொண்டு, அவர்களுடைய வேலையைத் தொடங்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் வேலைநிறுத்தம் செய்தாலும், செய்யாவிட்டாலும், உண்ணாவிரதம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்களுடைய நியாயமான கோரிக்கையை இந்த அரசு நிச்சயமாக கவனிக்கும். நியாயமான கோரிக்கை இல்லை என்று நான் சொல்லவில்லை. நியாயமான கோரிக்கையை இந்த அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(அ) திரு. சி. ஞானசேகரன் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இத்துடன் முடிவடைகிறது. திரு. ஆண்டித்தேவர் அவர்கள் எழுப்பியதையொட்டி, திரு. ஞானசேகரன் இரண்டாவது முறையும் வெளியேற்றப் பட்டிருக்கிறார், எனவே, இன்னும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டதையொட்டி, நான் ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தேன். திரு. ஞானசேகரனைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே ஒருமுறை லாபியில் காவலர்களைத் தாக்கிய

சம்பவத்தின்போது, லாபியிலிருந்து அப்புறப்படுத்தச் சொல்லியிருக்கிறேன். பேரவைக்குள் பெயர் குறிப்பிட்டு வெளியேற்றவில்லை. எனவே, அது பேரவை விதி 120-ன் கீழ் வராது. எனவே, நான் எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதற்கும் அவர் வரக்கூடாது என்று உத்திரவிட்டிருப்பது திரும்பப் பெறப்படுகிறது. அதே போல மற்ற உறுப்பினர்களும் அன்றைக்கு ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டதிலேதான் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் காவலர்களைத் தாக்கிய நிகழ்ச்சி. அந்தத் தாக்கியதிலிருந்து காவலர்களை காப்பாற்றுவதற்காக அங்கிருந்து அவர்களை அப்புறப்படுத்தச் செய்திருந்தேன். எனவே, அது பேரவை நடவடிக்கையின் கீழ் நடவடிக்கை எடுத்ததாக வராது. எனவே, இன்று முழுவதும் அவர்கள் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் மின் தடங்கல் அடிக்கடி ஏற்படுவது குறித்து பேரவையில் எழுப்ப வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார். அதற்குப் பின்னர், பல நாட்கள் அவர் அவைக்கு வரமுடியாத ஒரு சூழ்நிலையில் இருந்தார். அப்படி வந்திருந்தால், இடையிலே எடுத்திருப்பேன். அந்தப் பிரச்சினையையும் எடுக்க வேண்டும், இன்னொரு பிரச்சினை என்று இப்போது அவர் தெரிவித்திருக்கிற காரணத்தினால், அந்த பிரச்சினையை பேரவையின் கவனத்திற்கு எழுப்ப அனுமதிக்கிறேன்.

முற்பகல் 11-50

4. சிறப்புக் கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(ஆ) மின் தடங்கல் அடிக்கடி ஏற்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களாக சென்னையிலும் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மின்வெட்டு 'ஏற்பட்டிருக்கிறது. அப்படி அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதனால்; படிக்கின்ற மாணவ சமுதாயமும், அதே போல மின்சாரத்தை பயன்படுத்துகின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே, இது சம்பந்தமாக, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டேன். தாங்கள் என்னை அழைக்கின்ற நேரத்திலே, சில நாட்களுக்கு முன்பு அவர் கூறியிருந்தார், நான் அவைக்கு வரமுடியாத சூழ்நிலையிலிருந்த காரணத்தினால் இதை